பக்கங்கள்:-20

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | தை 07 | ஞாயிற்றுக்கிழமை | 21.01.2024 | அதிர்வு 173

**தேர்தலை இலக்காகக் கொண்டு**

## அமைச்சரவையில் அதிரடி மாற்றங்கள்?



அமைச்சரவையில் அடுத்த மாதம் மாற்றம் இடம்பெறவுள்ளது என்று அரச தகவல்கள் 06▸

# தமிழரசுக் கட்சியின் தலைவிதி திருமலையில் இன்று நிர்ணயம்

## இரகசிய வாக்கெடுப்பு மூலம் புதிய தலைவர் தெரிவு



தமிழினத்தின் வரலாற்றில் தனிப்பெரும் கட்சியாக விளங்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கான புதிய தலைவரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இன்று நடைபெறவுள்ளது.

தமிழரசுக் கட்சியின் பொதுச் சபை உறுப்பினர்கள் திருகோணமலையில் இன்று கூடி இரகசிய வாக்கெடுப்பு மூலம் புதிய தலைவரைத் தேர்ந்தெடுப் பார்கள்.

தலைமைப் பதவிக்குப் போட்டியிடும் 3 வேட்பாளர்களும் விட்டுக் கொடுப்புக் குத் தயாராக இருக்காததால், புதிய தலைவரை வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்ய தமிழரசுக் கட்சி அண்மையில் தீர்மானித்தது. 06▸

## வவுனியா - திருமலை வீதியில் முதியவர் ஒருவரின் சடலம் மீட்பு



(கே.வசந்தன்)

வவுனியா – திருகோணமலை பிரதான வீதியில் முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

வவுனியா, திருகோணமலை பிரதான வீதியின் வவுனியா எல்லைப் புறமாக ஹெப்பற்றிக்கொல்லாவ பகுதியிலேயே இந்தச் சடலம் நேற்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

60 வயது மதிக்கத்தக்க 06▸




எல்லாம் எதிர்பார்த்தபடி – திட்டமிட்டபடி – நடந்தேறினால் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் யார் என்ற விடயம் இன்று பிற்பகலில் தெரிய வந்து விடும்.

இலங்கைத் தமிழரசு கட்சியின் மத்திய குழு கூட்டம் நேற்று திருகோணமலையில் நடைபெறும் என்று நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். ஆனால் கூட்டம் நடக்கவில்லை. இறுதி நேரத்தில் அது ரத்தானது என்பதை 06▸





# சர்வதேச நாடுகளின் உயர்மட்டப் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துரையாடல்



அணிசேரா நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக உகாண்டா சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாடுகளின் உயர்மட்ட பிரதிநிதிகள் பலரை சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி சுப்ரமணியம் ஜெயசங்கரை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்தியா – இலங்கை இடையிலான இருதரப்பு முயற்சிகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொடர்ச்சியான வழிகாட்டல்களை பாராட்டுகிறோம் என இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

இதேவேளை, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் நேபாள பிரதமர் புஷ்ப கமல் தஹாலுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று நடைபெற்றுள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் நீண்ட காலமாக நிலவும் கலாசார மற்றும் மத உறவுகளை மேலும் மேம்படுத்துவது தொடர்பில் தலைவர்கள் கலந்துரையாடினர். இரு நாடுகளுக்கும் இடையிலான சுற்றுலாத்துறையை மேம்படுத்த இது உதவும் எனவும் வலியுறுத்தப்பட்டது.

இரு நாடுகளுக்கும் இடையேயான அரசியல் உறவை மேலும் விரிவுபடுத்தும் நோக்கில், பரிமாற்றத் திட்டத்தின் அடிப்படையில், இரு நாட்டு நாடாளுமன்ற விவகாரங்களை ஆய்வு செய்வதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு வாய்ப்பளிப்பது தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது.









# மாந்தை மேற்கில் தெரிவு செய்யப்பட்ட அமைப்புகளுக்குக் கதிரைகள் வழங்கல்

**(மன்னார் நிருபர்)**

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட கிராம மட்ட அமைப்புகளுக்கு முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தனது பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் கொள்வனவு செய்யப்பட்ட பொருள்களை வழங்கியுள்ளார்.

மாந்தை மேற்குப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் மாத்தை மேற்கு பிரதேச செயலர், நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன், முன்னாள் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இதன் போது முதல் கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட கிராம மட்ட அமைப்புகளுக்கு ஒரு தொகுதி கதிரைகள் வழங்கப்பட்டன.



# மரக்கன்றுகள் வழங்கல்

**(எம்.எம்.நௌபீக் )**

வெருகல் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு அகம் நிறுவனத்தின் அனுசரணையில் பிரதேச செயலகத்தில் வைத்து பிரதேச செயலர் எம்.ஏ.அனஸ் தலைமையில் நீர்ப்பாசன உபகரணங்கள் மற்றும் மாங்கன்றுகள் வழங்கப்பப்டடன.

இதன்போது அகம் நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக ஊழியர்களும் கலந்து கொண்டனர்.




# இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் இணையதள அங்குரார்ப்பண நிகழ்வு



இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் இணையதள அங்குரார்ப்பண நிகழ்வும், புதிய கட்டட அமைப்பு தொடர்பான ஊடக சந்திப்பும் அண்மையில் தலைவர் த. முத்துக்குமாரசுவாமி தலைமையில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் தலைவர் த.முத்துக் குமாரசுவாமி, ஆளுநர் சபை உறுப் பினர் வே. கந்தசாமி மற்றும் ஓய்வு நிலை பிரதம நீதியரசர் கனகசபாபதி ஸ்ரீபவன் ஆகியோர் உத்தியோகப் பூர்வ இணையத்தளத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவர் மற்றும் ஆளுநர் சபை உறுப்பினர்கள் உரை யாற்றுகையில், சங்கத்தின் ஆரம்பம் மற்றும் செயற்பாடுகள், எதிர்காலத் திட்டங்கள், புதிய கட்டட அமைப்பு தொடர்பான கருத்துக்களையும் தெரி வித்தனர்.

அத்தோடு இந்த நிகழ்வில் தொடர்ந்து தலைநகரில் மாணவர்களது முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்களுக்கு கௌர விப்பு நிகழ்வும் சங்கத்தின் சார்பில் மேற் கொள்ளப்பட்டது.









# 40 மீனவர்களை உடன் விடுவிக்க முடியும் என்றால் இழுவைப் படகு பிரச்சினையை ஏன் தீர்க்கமுடியாது

## வடமராட்சி வடக்கு சமாசத்தின் உப தலைவர் கேள்வி

"இரண்டு நாட்டு உயர்மட்டக் குழுக்கள் பேசி 40 இந்திய மீனவர்களை விடுவிக்க முடியும் என்றால், ஏன் இரண்டு நாட்டு உயர்மட்ட குழுக்களும் பேசி எங்களது எல்லைக்குள் இந்திய இழுவைப்படைகள் வரக்கூடாது என்பதற்கு ஒரு முடிவு எடுக்க முடியாது?"

– இவ்வாறு யாழ். மாவட்ட க.தொ.கூ.ச.சமாசங்களின் சம்மேளனத்தின் முன்னாள் உப தலைவரும், வடமராட்சி வடக்கு க.தொ.கூ.சங்கங்களின் சமாசத்தின் உப தலைவருமான நாகராசா வர்ணகுலசிங்கம் கேள்வி எழுப்பினார்.

யாழ். வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் தெரிவிக்கையில் –

"இந்திய பிரதமர் நரேந்திர மோடி இன்று (நேற்று) தமிழ் நாட்டுக்கு வருகிறார் என்றவுடன் இலங்கை மற்றும் இந்திய அரசின் உயர்மட்ட குழுக்கள் இரண்டும் கதைத்து ஒரு சில மணித்தியாளத்துக்குள் 40 இந்திய மீனவர்களும் விடுவிக் கப்படுவர்கள் என்ற முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இந்த முடிவை ஏன் ஒரு சில மணித்தியாலத்தில் எடுத்துள்ளனர்.




"நல்லெண்ண அடிப்படையிலே 40 இந்திய மீனவர்களையும் விடுவித்துள்ளோம். எனி எல்லை தாண்டி இந்திய மீனவர்கள் வருவார்களானால் அவர்களை விட மாட்டோம். அவர்களது படகையும் விடமாட்டோம் என்ற ஒரு முடிவை எடுத்து எங்களது மக்களுக்கு காத்திரமான முடிவை சொல்ல வேண்டும். அப்படி ஒரு முடிவை எடுப்பீர்களானால் எந்த ஓர் இந்திய இழுவைப் படகுகளும் எல்லை தாண்டி வராது.

"அதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கும்படி உங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்." – என்றார்.

# வவுனியாவில் யுவதிகள் இடையே மோதல் ஒருவர் வைத்தியசாலையில் 2 பேர் கைது!

## காயமடைந்த யுவதி வைத்தியசாலையில் அனுமதி - இரு பெண்கள் கைது!

(கே.வசந்தன்)

வவுனியாவில் யுவதி ஒருவர் மீது தாக்குதல் நடத்தினர் என்ற குற்றச்சாட்டில் இரு பெண்கள் நேற்றுக் கைது செய்யப்பட்டனர். பாதிப்படைந்த யுவதி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் இருந்து கழிவு தண்ணீர் மற்றும் வெள்ள நீர் என்பன வீதியில் உள்ள வாய்கால் ஊடாக செல்வது தொடர்பில் அப்பகுதியில் உள்ள இரு வீட்டாரிடையே முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன.

அந்தப் பகுதி வடிகாலமைப்பு சீரற்ற நிலையில் காணப்படுவதாலும், அனுமதியற்ற கட்டடங்களின் காரணமாகவும் இவ்வாறான பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன என வவுனியா தெற்குப் பிரதேச சபைக்கு சம்பந்தப்பட்ட வீட்டாரால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த போதும் பிரதேச சபையால் அப்பிரச்சினை தீர்த்து வைக்கப்படவில்லை.

இந்நிலையில், குறித்த பகுதியில் உள்ள வீடு ஒன்றின் கழிவு நீர் வீதி வாய்கால் ஊடாக இன்னுமொரு வீட்டை அண்மித்து சென்ற நிலையில், கழிவு நீரை வீதிக்கு விட்ட வீட்டாருடன் அயல் வீட்டில் வசிக்கும் யுவதி ஒருவர் முரண்பட்டுள்ளார். இதன்போது இரு பகுதியினருக்கும் வாய்த்தர்க்கம் ஏற்பட்ட நிலையில், குறித்த யுவதி மீது இரு பெண்கள் இணைந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். இதனால் காயமடைந்த 22 வயது யுவதி வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய தாக்குதல் மேற்கொண்டவர்கள் என்று கூறப்படும் 30 மற்றும் 25 வயதுடைய சகோதரிகளான இரு பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்றில் தாங்கள் முற்படுத்தவுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் வவுனியாவில் அரச திணைக்களம் ஒன்றில் உத்தியோகத்தராக பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



இதேவேளை, வவுனியா, உக்கிளாங்குளம் பகுதியில் உள்ள பல வீதிகளில் வடிகாலமைப்பு சீர்செய்யப்படாத நிலை காணப்படுவதுடன், மழை காரணமாக பல வீடுகள் வெள்ளத்தினால் பாதிப்படைந்த போதும் வவுனியா தெற்கு பிரதேச சபை செயலகம் உரிய நடவடிக்கை எடுக்காது அசமந்த போக்குடன் செயற்பட்டு வருகின்றமையே இவ்வாறான குற்றச் செயல்கள் இடம்பெறுவதற்கு வழிவகுத்துள்ளது என விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

# சி.ஐ.டிக்குப் பொறுப்பான டி.ஐ.ஜியின் கீழ் மூன்று பொலிஸ் பிரிவுகள் இணைக்கப்பட்டன

மூன்று பொலிஸ் பிரிவுகள் குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்கு (சி.ஐ.டிக்கு) பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபரின் (டி.ஐ.ஜியின்) கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.

குற்றப்புலனாய்வு திணைக்களம், பயங்கரவாத ஒழிப்பு மற்றும் விசாரணைப் பிரிவு, சட்டவிரோத சொத்துகள் தொடர்பான விசாரணைப் பிரிவு என்பன இவ்வாறு குற்றப்புலனாய்வு திணைக்களத்திற்குப் பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபரின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளன.



# சதொச விற்பனை நிலையங்களில் மீண்டும் முட்டைக்குத் தட்டுப்பாடு!



இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள முட்டைக்கு 14 ரூபா வரி விதிக்கப்பட்டுள்ளமையினால் சதொச விற்பனை நிலையங்களில் முட்டைக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை முட்டை வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவர் என்டன் அப்புஹாமி தெரிவித்துள்ளார்.

தற்போது சதொச விற்பனை நிலையங்களில் முட்டைகளுக்கு தட்டுப்பாடு நிலவி வரும் நிலையில் வர்த்தக நிலையங்களில் 51 ரூபாய் முதல் 52 ரூபாய் வரை முட்டை விற்பனை செய்யப்பட்டு வருவதாக பொதுமக்கள் தெரிவித்துள்ளனர்.

புதுவருடத்தின் போதும் முட்டை சந்தைக்கு விடுவிக்கப்படவில்லை என வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர் என்றும் மக்கள் குறிப்பிடுகின்றனர்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்றுக் காலையில்தான் அறிந்து கொண்டேன்.

கட்சியின் பதில் பொதுச் செயலாளர் டாக்டர் சத்தியலிங்கம் சுகவீனம் காரணமாக ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றார் என்று தெரிகின்றது. அதனால் நேற்றைய மத்திய குழு கூட்டத்திற்கு உறுப்பினர்கள் அழைக்கப்படவில்லை. அழைப்பு அவர்களுக்கு அனுப்பப்படவில்லை.

டாக்டர் சத்தியலிங்கம் இன்றும் கட்சியின் பொதுக்குழுவின் கூட்டத்தில் தலைவர் தேர்தலின் போது பிரசன்னமாகி இருக்க மாட்டார்.

ஏற்கனவே இந்தத் தேர்தலை திருகோணமலையில் நடத்துவதற்கு மாவட்டந்தோறும் ஒருவர் வீதம் எட்டு மாவட்டங்களுக்கும் பிரமுகர்களை தெரிந்து ஒரு குழுவை அமைக்க வேண்டும் என்று கட்சியின் மத்திய குழுவின் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கான பொறுப்பு கட்சியின் பதில் பொதுச் செயலாளரிடம் வழங்கப்பட்டும் இருந்தது.

அதன்படி மாவட்டம் தோறும் தலா ஓர் உறுப்பினரைத் தேர்வு செய்து அவர்கள் மூலம் இன்றைய தேர்தலை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளார் கட்சியின் பதில் பொதுச் செயலாளர்.

அந்த எண்மரின் விவரம் வருமாறு:-

+ யாழ்ப்பாணம் – கனகசபாபதி
+ கிளிநொச்சி – குருகுலராஜா
+ முல்லைத்தீவு – சாந்தி ஸ்ரீஸ்கந்தராஜா
+ மன்னார் – பரஞ்சோதி
+ வவுனியா – கருணாநிதி
+ மட்டக்களப்பு – சரவணபவன்
+ அம்பாறை – கோடீஸ்வரன்
+ திருகோணமலை – குகதாசன்

இவர்களே இன்றைய தேர்தலை நடத்தும் குழுவில் இடம் பெற்றுள்ளனர்.

அத்தோடு இன்றைய தேர்தலில் வாக்களிக்கத் தகுதியானோர் என 337 பேர் அடங்கிய பட்டியலையும் குழுவிடம் கையளித்துள்ளார் பதில் பொதுச் செயலாளர் டாக்டர் சத்தியலிங்கம்.

அதில் கட்சியின் கிளைகள் சார்பாகப் பொதுக்குழுவில் பங்கு பெறும் பிரதிநிதிகளின் பெயர்களும், ஏற்கனவே மத்திய குழுவில் இடம் பெற்றிருக்கும் 47 உறுப்பினர்களின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

சில பெயர்கள் அந்தப் பட்டியலில் இரண்டு இடங்களில் இருப்பதால் அவையவற்றில் ஒன்று நீக்கப்படும் எனத் தெரிகிறது.

அத்தகைய சூழலில் இன்றைய தேர்தலில் வாக்களிக்கத் தகுதியானோர் எண்ணிக்கை 330இலும் சற்று குறைவாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவர்களே தமிழரசின் தலைவிதியை இன்று நிர்ணயம் செய்யவுள்ளனர்.

## சதொசவில் இன்றுமுதல் முட்டை விலை 43 ரூபா



சதொச ஊடாக விற்பனை செய்யப்படும் இறக்குமதி செய்யப்பட்ட இந்திய முட்டை ஒன்றின் விலை இன்று முதல் 43 ரூபாவாக அதிகரிக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

வற் வரி அதிகரிப்பால் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் முட்டைகளை 35 ரூபாவுக்கு விற்க முடியாததால் சதொச விற்பனை நிலையங்கள் முட்டை விற்பனைக்கு கட்டுப்பாடு விதித்துள்ளன. அதன்படி சதொசவில் முட்டை தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில், சந்தையில் நாட்டு முட்டையின் விலை மீண்டும் அதிகரித்துள்ளது என அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

## வவுனியா - திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த முதியவர் விபத்தின் காரணமாகவே உயிரிழந்துள்ளார் எனவும், விபத்தை ஏற்படுத்திய வாகனம் தப்பிச் சென்றுள்ளது எனவும், விபத்தை ஏற்படுத்தியவர்கள் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. மேற்படி நபர் வவுனியாவைச் சேர்ந்தவராக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹெப்பற்றிக்கொல்லாவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அமைச்சரவையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவிக்கின்றன.

எதிர்வரும் தேர்தலை இலக்காகக் கொண்டு அமைச்சரவையில் மாற்றத்தை ஏற்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உத்தேசித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாற்றத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன என்றும் கூறப்படுகின்றது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அமைச்சுப் பதவிகளுக்காக நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரின் பெயர்ப்பட்டியல் சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், அவர்களுக்கு இதுவரை அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## தமிழரசுக் கட்சியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சி.சிறிதரன் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் ஆகிய மூவரும் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்குப் போட்டியிடுகின்றனர்.


தமிழரசுக் கட்சியின் வரலாற்றில் தலைவர் பதவிக்கு வாக்கெடுப்பு நடைபெறுவது இதுவே முதல் தடவையாகும்.

# இயல்வாணனின் கவிதை நூல் வெளியீட்டு விழா கோப்பாயில்

இயல்வாணன் எழுதிய "யாரும் பாடலாம் என்னை" கவிதை நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் 25ஆந் திகதி வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு கோப்பாய் நாவலர் தமிழ் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

தேசிய கலை இலக்கியப் பேரவையின் தலைவரும், தாயகம் சஞ்சிகை ஆசிரியருமான க.தணிகாசலத்தின் தலைமையில் இந்நிகழ்வு நடைபெறவுள்ளது. வெளியீட்டுரையை எழுத்தாளர் சட்டத்தரணி சோ.தேவராஜா நிகழ்த்துவார். மதிப்பீட்டுரைகளை பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை ஆசிரியரான எழுத்தாளர், விமர்சகர் ந.குகபரனும், கிராமசேவகரான கவிஞர் வ.வடிவழகையனும் நிகழ்த்தவுள்ளனர். ஏற்புரையினை வலிகாமம் வலய பிரதிக் கல்விப் பணிப்பணிப்பாளரான கவிஞர் இயல்வாணன் வழங்குவார்.

தேசிய கலை இலக்கிய பேரவையின் புத்தகக் கண்காட்சி, நாடகம் என்பனவும் இங்கு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஆட்சி முறைமை மாற்றம் வராது

நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை இரத்துச் செய்யும் நபருக்கு நிபந்தனையின்றித் தாம் ஆதரவு வழங்கத் தயாராக இருக்கின்றார் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறை காரணமாக நாடு அழிந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால், நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை இரத்துச் செய்வார் என ரணில் விக்கிரமசிங்க உறுதி கூறினால், தான் இரண்டு கைகளையும் உயர்த்தி அவருக்கு ஆதரவளிப்பார் எனவும் அவர் கூறியுள்ளார்.

நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சியை முறையை மாற்றிய பின்னர், மேலும் இரண்டு வருடங்கள் ரணில் விக்கிரமசிங்க பதவியில் இருந்தாலும் பிரச்சினையில்லை எனவும் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமைக்கு எதிரான கருத்தியல் பலமாக இருந்தாலும் அசைக்க முடியாத இரும்புச்சட்டகக் கட்டமைப்பாக கடந்த 45 ஆண்டுகள் அது உறுதியுடன் தொடர்கின்றது.

இந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை 1978 ஆம் ஆண்டின் அரசமைப்பு மூலம் அறிமுகப்படுத்தியவர் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனதான். அவரே ஆரம்பத்தில் 11 ஆண்டுகள் பதவியில் இருந்தார். அவருக்கு பின் ஆறு ஆண்டுகள் அவரது கட்சியைச் சேர்ந்த ரணசிங்க பிரேமதாஸவும். டி.பி. விஜயதுங்கவும் பதவி வகித்தனர்.

அதற்குப் பின்னர் பதவிக்கு வந்த அனைத்து ஜனாதிபதிகளுமே இந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்போம் என்று வாக்குறுதி அளித்துத்தான் இந்த பதவிக்கு வந்தனர். கோட்டாபய ராஜபக்ஷ மட்டுமே இதற்கு விதிவிலக்கானவர். அப்படி அவர் தேர்தலுக்கு முன்னர் வாக்குறுதி அளிக்கவில்லை. அவரது இடத்துக்கு - எஞ்சிய காலத்துக்கு - ஜனாதிபதி பதவிக்கு வந்திருக்கும் ரணில் விக்கிரமசிங்கவும் அப்படி ஒரு வாக்குறுதி அளித்து பதவிக்கு வராவிட்டாலும், முன்னைய ஜனாதிபதித் தேர்தல்களில் அப்படி நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சியை முறையை ஒழிப்போம், ஒழிக்க வேண்டும் என்று மக்களுக்கு வாக்குறுதி கொடுத்தவர்தான்.

சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ, மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க போன்றோர் எல்லாம் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்போம் என உறுதி அளித்தனர். சபதம் எடுத்தனர்.

ஆயினும் செயலில் எதுவும் நடக்கவில்லை. 'நித்திய கண்டம் பூரண ஆயுசு' என்பது போல அந்த நிறைவேற்றதிகார ஆட்சி முறையே தொடர்கின்றது.

ஆட்சி, அதிகாரத்துக்கு வருவதற்காக இந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்போம் என நமது அரசியல் தலைவர்கள் வீம்பாக அறிவிப்புக்கள் விடுத்தாலும், அந்த ஆட்சிக் கதிரைக்கு வந்ததும், அதன் நிறைவேற்றதிகார ருசியில் மூழ்கி, அந்தப் பதவி சுகத்தை அனுபவித்து, அதிகாரத்தைக் கோலோச் சுவதிலேயே குறியாக இருக்கின்றார்களே தவிர, அந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்பதில் பற்றுறுதியுடன் இல்லை.

கடைசியாகப் பதவியில் இருந்த - இருக்கின்ற - ஐந்து ஜனாதிபதிகளில் கோட்டாபய ராஜபக்ஷ தவிர்ந்த ஏனைய நால்வருமே இந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையையே ஒழிப்போம் என்று ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் எழுத்து மூலம் உறுதியுரை கொடுத்தவர்கள் தான். ஆனால் செயலில் ஏதும் செய்யவில்லை.

போதாக்குறைக்கு தமிழ்ப் போராளிகள் முன்னெடுத்த தனிநாட்டுப் போராட்டத்தை எதிர்கொண்டு அழிப்பதற்கு தென்னிலங்கை ஆட்சி பீடத்திற்கு பேருதவியாக அமைந்தது இந்த ஆட்சி முறைமைதான் என்ற கருத்தியல் தென்னிலங்கையில் ஆழ ஊன்றி இருக்கையில், அந்த ஆட்சி முறைமையை மாற்றுவது அல்லது நீக்குவது அவ்வளவு சுலபமான விடயமே அல்ல.

அத்தோடு இப்போது உள்ள அரசமைப்புப் படி, அதன் கீழ் இந்த ஆட்சி முறைமையை மாற்றுவதாயின் நாட்டின் அரசமைப்பில் பல அடிப்படை மாற்றங்களைச் செய்ய வேண்டி இருக்கும். அதற்கு சர்வஜன வாக்கெடுப்பு மூலம் மக்கள் அனுமதியும் பெறப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் வழிகாட்டும் என உறுதியாக நம்பப்படுகிறது.

இவற்றையெல்லாம் எல்லாம் தாண்டி, தற்போதைய நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவது என்பது சுலபமான விடயம் அல்ல. அது டாக்டர் ராஜித சேனரத்தினவிற்கும் நன்கு புரிந்த விடயம்தான்.

அதே சமயம் மறுபுறத்தில் இந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்காமல், நாடு உருப்பட மாட்டாது என்ற யதார்த்த உண்மையும் புரிந்து கொள்ளப்பட வேண்டியதே.

# இலங்கைத் தொழிலாளர்களின் பிரச்சினைக்கு தீர்வு வழங்க ஜோர்தான் அமைச்சு நடவடிக்கை

ஜோர்தானில் இரண்டு ஆடைத்தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளமையினால், சிரமங்களை எதிர்கொண்டுள்ள இலங்கைத் தொழிலாளர்களின் பிரச்சினைகளுக்கு விரைவான தீர்வுகளை வழங்குவதற்கு ஜோர்தான் தொழில் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

ஜோர்தானுக்கான இலங்கை தூதரக அதிகாரிகள், அந்நாட்டு தொழில் அமைச்சின் அதிகாரிகளைச் சந்தித்து இது தொடர்பில் அண்மையில் கலந்துரையாடினர் என வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

விசா காலாவதியாகியும் தமது நாட்டில் தங்கியிருக்கும் இலங்கைத் தொழிலாளர்களை அபராதம் எதுவுமின்றி திருப்பியனுப்ப ஜோர்தான் தொழில் அமைச்சின் அதிகாரிகள் ஒப்புக்கொண்டுள்ளனர் எனப் பணியகம் குறிப்பிட்டுள்ளது.

இவர்களுக்கான விமான பயணச்சீட்டுக்களை வழங்குதல் உள்ளிட்ட உதவிகளை வழங்க இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் பணியகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவதற்காக தொழில் மற்றும் துறைசார் பயிற்சி உரிமைகள் தொடர்பான விசேட தெளிவு கொண்டுள்ள சட்டத்தரணிகளின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ளவும் ஜோர்தான் தொழில் அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது.

கலந்துரையாடலின் போது எடுக்கப்பட்ட தீர்மானம் தொடர்பில் மேற்படி ஆடைத்தொழிற்சாலைகளில் பணியாற்றிய இலங்கையர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக வெளி நாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, இந்த தொழிலாளர்களில் வேறு தொழில்களுக்குச் செல்ல எதிர்பார்த்துள்ளவர்களுக்கு அதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவும், நாடு திரும்பும் எதிர்பார்ப்பிலுள்ள தொழிலாளர்களை கூடிய விரைவில் அழைத்து வரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் மேலும் கூறியுள்ளது.



# காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் மரணம்

காட்டு யானை தாக்கி குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பொலனறுவை மாவட்டம், மெதிரிகிரியை பிரதேசத்தில் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

வீட்டுக்கு அருகாமையில் நின்ற யானையை மேற்படி நபர் விரட்டியபோதே யானையின் தாக்குதலுக்கு உள்ளாகி சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தந்தையான மஹிந்த ஜெயசிங்க (வயது 48) என்ற நபரே சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்



என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். சடலம் பிரேத பரிசோதனைக்காக மெதிரிகிரியை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# கொள்ளுப்பிட்டியைச் சேர்ந்த இளைஞர் அம்பாந்தோட்டைக் கடலில் மூழ்கிப் பலி

அம்பாந்தோட்டைக் கடலில் மூழ்கி இளைஞர் ஒருவர் சாவடைந்துள்ளார்.

கொழும்பு, கொள்ளுப்பிட்டியைச் சேர்ந்த 27 வயதுடைய சுஜீவ பிரியலால் என்ற நபரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் நண்பர்களுடன் நேற்று (20) மதியம் அம்பாந்தோட்டைக் கடலில் குளித்த போதே நீரில் மூழ்கிச் சாவடைந்துள்ளார்.

சடலம் நேற்று மாலை மீட்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது .

உயிரிழந்த இளைஞருடன் கடலில் குளித்த ஏனைய 4 இளைஞர்களும் ஆபத்து எதுவுமின்றி மீட்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# ரூ. 10 ஆயிரம் லஞ்சம் வாங்கியவர் சிக்கினார்

(பாறுக் ஷிஹான்)

தொழில் திணைக்களத்தில் சேவை ஒன்றை வழங்கும் பொருட்டு 10 ஆயிரம் ரூபா லஞ்சம் கோரிய சம்பவம் தொடர்பில் கைதான – தொழில் திணைக்களத்தில் கடமையாற்றிய – உத்தியோகத்தரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை கல்முனை நீதிவான் எம்.எஸ்.எம் சம்சுதீன் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் சந்தேக நபர் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

அம்பாறை மாவட்டம் பெரியநீலாவணைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட




உணவகம் ஒன்றில் வைத்து சந்தேக நபரான உத்தியோகத்தர் தொழில் திணைக்களத்தில் சேவை ஒன்றை பெறும் பொருட்டு நபர் ஒருவரிடம் ரூபா 10 ஆயிரம் லஞ்சம் பெற்றுக்கொள்ளும் போது கொழும்பில் இருந்த வருகை தந்த இலஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நபர் ஒருவர் செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் சந்தேகநபர் கடந்த வியாழக்கிழமை அன்று உணவகம் ஒன்றில் வைத்து கொழும்பில் இருந்து வந்து மாறுவேடத்தில் இருந்த லஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார். மருதமுனை 5 பிரிவு காரியப்பர் வீதியை சேர்ந்த இப்றாஹிம் லெப்பை அப்துல் நஷார்(வயது–54) என்பவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான சந்தேக நபர் ஏற்கனவே குற்றச்செயல் ஒன்றிற்காக அரச சேவையில் இடைநிறுத்தப்பட்டு பின்னர் அரச சேவையில் இணைக்கப்பட்டவர் என்பது மேலதிக விசாரணையில் தெரியவந்துள்ளது.



# சுமந்திரன் எதிர் சிறீதரன் இன்று வெற்றி யாருக்கு?





புருஜோத்தமன் தங்கமயில்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் யார் என்பது இன்று (ஞாயிற்றுக் கிழமை) பிற்பகல் தெரிந்துவிடும். திருகோணமலையில் இன்று காலை 10 மணிக்கு கூடும் தமிழரசுக் கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்கள் புதிய தலைவரைத் தேர்வு செய்வதற்காக வாக்களிப்பார்கள். தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர், தேர்தலொன்றின் மூலம் தேர்வு செய் யப்படப் போகிறார் என்ற விடயம் வெளியானதும், தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் பற்றிக்கொண்ட பரபரப்பு நாளுக்கு நாள் அதிகரித்து வந்தது. தமிழரசுக் கட்சிக்குள்ளும் அதன் ஆதரவாளர்கள் மத்தியிலும் கடந்த பொதுத் தேர்தல் களம் வெளிப்படுத்திய போட்டி, பொறாமை, கசட்டுத்தனங்களுக்கு ஒப்பான நிலை இப்போதும் வெளிப்படுத்தப்பட்டது. இந்த நிலையைப் பயன்படுத்திக் கொண்டு பண முதலைகளும் அவர்களை ஒட்டியிருக்கும் குருவிச்சைகளும் தங்களது சுயநல தேவைகளுக்கான தலையீடுகளை எந்தவித அரசியல் அறமும் இன்றி இறுதிக்கணம் வரையில் வெளிப்படுத்தி வருகிறார்கள்.

தமிழ்த் தேசிய அரசியலின் மூத்த முதன்மைக் கட்சியான தமிழரசுக் கட்சியின் தலைவர், ஜனநாயக முறையில் இம்முறை தெரிவு செய்யப்படவிருக் கிறார். கட்சியின் தொண்டர்கள், பொதுக் குழு உறுப்பினர்களின் விருப் பங்களுக்கும் எதிர்பார்ப்புக்களுக்கும் அப்பால் நின்று, சில சிரேஷ்ட தலைவர்களே கடந்த காலங்களில் தமிழரசுக் கட்சியின் தலைவரைத் தீர்மானித்து வந்திருக்கிறார்கள். ஆனால் இம்முறை நிலைமை அவ்வாறு இல்லை. பொதுக் குழு உறுப்பினர்கள் நேரடி யாக வாக்களிக்கிறார்கள். உயர்ந்தபட்ச ஜனநாயகம் கட்சிக்குள் பேணப்படுவதற் கான ஆரம்ப கட்டமாக இத னைக் கொள்ளலாம். குடும்பக் கட்சிகளைக் கொண்டிராத தமிழ்த் தேசியக் கட்சிகள் தமிழரசுக் கட்சியின் இந்தத் தலைவர் தெரிவை முன்மாதிரியாகக் கொள்ளலாம். அது தான், வாழ்நாள் முழுவதும் தலைவர்களாக இருக்க நினைப்பவர்கள் இல்லாத கட்சி அரசியலை நிலை நிறுத்த உதவும்.



தமிழரசுக் கட்சியின் தலைவர் தேர்வு என்பது, அடிப்படையில் உட்கட்சி (ஜன நாயகம்) சார்ந்தது. ஆனால், அது ஒட்டுமொத்த தமிழ்த் தேசிய அரசியலின் தலைமைத்துவத்தையும் தீர்மானிக்கும் விடயம் என்பது போலவே, தமிழ்ப் பரப்பு நோக்கிக் கொண்டிருக்கிறது.

தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக யார் வரவேண்டும், யார் வரக்கூடாது என்று சி.வி.விக்னேஸ்வரன் கருத்துச் சொல்கிறார். தமிழரசுக் கட்சினால் அரசியலுக்கு அழைத்துவரப்பட்ட விக் னேஸ்வரன், கட்சித் தலைமை மீதும் கட்சி நடவடிக்கைகள் மீதும் அதிருப் திகளை வெளிப்படுத்தி, புதிய கட்சியை ஆரம்பித்து, பிரிந்து சென்றவர். அவர், தமிழரசுக் கட்சியின் தலைமைக்கு யார் வரவேண்டும் என்று கூற விழை கின்றார் என்றால், தமிழரசுக் கட்சியின்

தொடர்ச்சி ▼

# சுமந்திரன் எதிர் சிறீதரன்
# இன்று வெற்றி யாருக்கு?

தொடர்ச்சி▲

தலைமை தமிழர் அரசியலில் வகிக்கும் பங்கு என்ன மாதிரியானது என்பது தெரியும். இன்னொரு பக்கம், அக – புற சக்திகள் தமிழரசுக் கட்சியின் தலைவராக யார் வரவேண்டும் என்பது குறித்து அதீத கவனம் செலுத்துவதைக் காட்டுவதாகவும் கொள்ள முடியும். சமூக ஊடகங்களிலும், அக – புற தலையீடுகள் மூல மும் தமிழரசுக் கட்சியின் பொதுச்சபை உறுப்பினர்கள் மீது தொடர் அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. சில தரப்புக்களினால் அழுத்தங்கள் என்பது அச் சுறுத்தல் என்ற அளவுக்கு அதிகரித் தும் இருக்கின்றன. பொதுக்குழு உறுப்பினர்களின் விவரங்களைப் பொது வெளியில் பகிர்ந்து, அவர்களின் வீடுகளை முற்றுகையிட வேண்டும் என் றெல்லாம் சில தரப்புக் களினால் தூண்டப்படுகின்றது. இந்தச் செயல்களில் ஈடுபடும் தரப்பினர், கடந்த பொதுத் தேர்தலில் எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறீதரனுக்கு எதிரான அணியில் இருந்தவர்கள் என்பதுதான் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயம்.

இன்னொரு பக்கம், பொதுக்குழு உறுப்பினர்களை புலம்பெயர் தேசங்க ளில் இருந்து தொடர்பு கொள்ளும் சிலர், தாங்கள் சொல்லும் வேட்பாளருக்கு வாக்க ளிக்குமாறு அழுத்தங்க ளைப் பிரயோகிக்கிறார்கள். தாங்கள் சொல்வதற்கு இணங்காது விட்டால், குறித்த உறுப்பினர் தேர்தல்களில் போட்டியிடும் சந்தர்ப்பத்தில் அவரைத் தோற்கடிப்பதற்காக வேலை செய்வோம் என்றும் அச்சுறுத்தப்படுகிறார்கள். கடந்த பொதுத் தேர்தலிலும் யார் வெல்ல வேண்டும், யார் தோற்க வேண்டும் என்ற புற அழுத்தங்கள் கனதியாக இருந்தன. ஆனால், புற அழுத்தங்களைப் புறக்கணித்து தங்களுக்கு யார் தேவை என்பதை உணர்ந்தே தமிழ் மக்கள் வாக்களித்தார்கள். புற அழுத்தங்களுக்கு அடி பணிந்தவர்களும், அந்த வேட்பாளர்க ளும் தோற்கடிக்கப்பட்டு வீடுகளில் இருந்த காட்சிகளை தமிழ்த் தேசம் காண்பித்தது. அதனைத் தமிழரசுக் கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்கள் நன்கு உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். அதனால், அக – புற அழுத்தங்களை பொருட்படுத்தாது தலைவர் தேர்வில் வாக்களிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

ஆனால், தமிழரசுக் கட்சியின் தலை வர் தேர்வில் வேட்பாளராக இருக்கும் சிரேஷ்ட தலைவரான சீ. யோகேஸ்வரன் மோசமான முன்னுதாரணமாக செயற் படுகிறார். ஏற்கனவே, அவர் தன்னை டம்மி வேட்பாளர் என்று அறிவித்து விட்டார். எம்.ஏ.சுமந்திரனை தோற்க டிப்பதற்காக சிவஞானம் சிறீதரனுக்காக போட்டிக் களத்தில் இறங்கியதாக வெளிப்படுத்திவிட்டார். அதுமாத்திரமல் லாமல், தான் ஆதரிக்கும் வேட்பாளரை என்ன காரணத்துக்காக பொதுக்குழு உறுப்பினர்கள் வெற்றிபெற வைக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி ஆதரவை கோருவதுதான் சரியாக இருக்கும். ஏனெனில், நடைபெறுவது பொதுத் தேர்தல் அல்ல. போட்டியில் இருப்பது மாற்றுக் கட்சியும் அல்ல. ஒரே கட்சிக்குள் இருக்கும் இருவருக்கு இடையில்தான் போட்டி. யார் வென்றாலும் அவரோடு இணைந்து பணியாற்றுவேன் என்று சுமந்திரனும் சிறீதரனும் அறிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலையில், மூத்த தலைவராக யோகேஸ்வரன் அதற்கான அணுகு முறையை வெளிப்படுத்தியிருக்க வேண்டும். மாறாக, அவர் இடுப்புக்கு கீழே தாக்குகின்ற அறமற்ற செயற் பாட்டை சொந்தக் கட்சி வேட்பாளர் மீதே செய்கிறார். பெரும் வைரிகளுக்கு இடையிலான போரிலேயே இடுப்புக்கு கீழ் தாக்குவது அறமல்ல என்பது மரபு. அப்படிப்பட்ட நிலையில், சொந்தக் கட்சியினர் மீதே அவ்வாறான கீழ்த்தர மான செயலை யோகேஸ்வரன் செய்தி ருக்கிறார். 'சுமந்திரன் தமிழ்த் தேசிய வாதி அல்ல. அவரிடம் தமிழரசுக் கட்சித் தலைமை செல்வது எதிர்காலத்துக்கு கேடு..' என்று அவர் ஊடக மாநாட்டைக் கூட்டி அறிவிக்கிறார். ஒரே கட்சியில் பத்து வருடங்களுக்கு மேலாக சுமந்திரனோடு பயணித்தவர் யோகேஸ்வரன். அப்படிப்பட்ட ஒருவர், உட்கட்சித் தேர்தலொன்றுக்காக இவ்வாறான விடயத்தை பொது வெளியில் வைக்கி றார் என்றால், அதன் பின்னணி தொடர் பில் ஆராய வேண்டியிருக்கின்றது.

இன்றைக்கு யோகேஸ்வரன் சிறீதர னுக்காக வாக்குக் கேட்கும் ஒருவர். வெளிப்படையாக நோக் கினால், அவர், சிறீதரனினால் மட்டக்களப்பு வாக்குகள் சுமந்திரனுக்கு செல்வதைத் தடுப்பதற் காக கள மிறக்கப்பட்ட டம்மி வேட்பாளர் என்பதுதான் பெரும் பாலானவர்களின் பார்வை. இதுவே சிறீதரனின் அணுகு முறையை கேள்விக்குள்ளாக்க வைக் கின்றது. அப்படிப்பட்ட நிலையில், தற்போது யோகேஸ்வரன் வெளிப்படுத்தும் கருத்துக்களும் சிறீதரனின் ஆசிர் வாதத்தோடு அரங்கேற்றப்படுவன என்றே கொள்ளப்படும். உண்மையில் இது, தலைமைத்துவ பண்புகள் சார்ந்த ஒன்றா? யார் வென்றாலும் அவர்களு டன் இணைந்து பணியாற்ற தயாராக இருக்கும் ஒருவர் இவ்வாறான நிலையை எவ்வாறு தன்னுடைய பெயரி னால் அனுமதிக்கிறார்? அதுபோக, தமிழரசுக் கட்சியின் தலைவர் தேர்வில் வென்றால், எதிராக போட்டியிட்டவரை உள்வாங்கி பயணிப்பதற்கு அவர் தயாராக இருப்ப தற்கான மனநிலையின் வெளிப்பாடா இது? சிலவேளை தான் தோல்வியுற்றால், சுமந்திரனோடு எப்படி அவர் இணைந்து பயணிப்பார்? தமிழ்த் தேசியவாதி இல்லாத சுமந்திரனின் தலைமைத்துவத்தை அவர் எப்படி ஏற்க முடியும், இல்லையென்றால் அவர் கட்சியை விட்டு வெளியேறுவாரா? இந்தக் கேள்விகள் இந்தப் பத்தியாளரி னால் பெரும் ஆர்வத்தோடு எழுப்பப்படு வன அல்ல. மாறாக, ஒரே கட்சிக்குள் தலைவர் தேர்வில் போட்டியிடுவதற்காக மிகமோசமான அணுகுமுறையை வெளிப்படுத்தும் அணியினர் சிறீதர னின் பெயரைச் சொல்லி செய்யும் போது தவிர்க்க முடியாமல் எழுப்பப்ப டுவன.

'சுமந்திரன் எதிர் சிறீதரன்' என்ற போட்டிக்களத்தில் யாருக்கு தங்களது ஆதரவு என்று அறிவித்த பல முக்கி யஸ்தர்கள் இருக்கிறார்கள். அதில், முல்லைத்தீவு மாவட்ட தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரான து. ரவிகரன் முக்கியமானவர். அவர், தன்னுடைய ஆதரவு சுமந்திரனுக்கானது என்று ஏற்கனவே அறிவித்துவிட்டார். உட்கட்சி ஜனநாயகம் சார்ந்து இடம்பெறும் தேர்த லொன்றில் ஏன், ஆதரவு யாருக்கு என்பதை வெளிப் படையாக அறிவித்தீர்கள் என்று இந்தப் பத்தியாளர் அவரிடம் கேட்டார். அதற்கு ரவிகரன் கீழ்க்கண்டவாறு பதிலளித்தார். "....தமிழரசுக் கட்சியில் சுமந்திரனும் சிறீதரனும் முக்கியமான தலைவர்கள். அவர்கள் இருவரும் கட்சிக்கு அவசியமானவர்கள். அவர்களில் ஒருவரைத் தவிர்த்துக் கொண்டு நான் எந்த முடிவையும் எடுக்கவில்லை. ஆனால், தமிழரசுக் கட்சியின் முகமாக இருப்பவர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அதற் கான ஆளுமையோடு இருக்க வேண்டும். அனை வரையும் அரவணைத்துச் செல்ல வேண்டும். யாழ்ப்பாணத்துக்குள் மாத்திரமல்லாமல், வடக்கு கிழக்கு பூராவும் தலைவராக – செயற்பாட்டாளராக – இருக்க வேண்டும். அதனையெல்லாம் தாண்டி, தமிழர் தாயகம் காக்கப்பட்டாலே, தமிழ்த் தேசியம் காக்கப் படும். அதற்கு முதலில் தமிழர் நிலம் காக்கப்பட

தொடர்ச்சி▼

# சுமந்திரன் எதிர் சிறீதரன்
# இன்று வெற்றி யாருக்கு?

தொடர்ச்சி▲

வேண்டும். நிலத்தைக் காத்தலில் சட்ட ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் சுமந்திரன் செலுத்தும் வகிபாகம் யாரினாலும் ஈடுசெய்ய முடியாதது. குருந்தூர்மலை விவகாரம், வெடுக்குநாறிமலை விவகாரம் தொடங்கி எல்லை மாவட்டமான முல் லைத்தீவு எதிர்கொள்ளும் பேரினவாத ஆக்கிரமிப்புச் சிக்கல்களை எதிர்கொள் வதில் சுமந்திரன் முதல் ஆளாக நிற்பவர். அதனால் தான், அவருக்கான ஆதரவினை வெளிப்படையாக அறி வித்தேன்...” என்றார்.

தமிழரசுக் கட்சித் தலைமைத்துவத் துக்கான தேர் தலை சாதி, மதம், பிரதேசவாதம் என்கிற அணுகுமுறை யோடு கட்சிக்குள்ளும் வெளியிலும் அணுகும் தரப்பினரும் தங்களை வெளிப்படுத்திக் கொண்டிருக் கிறார்கள். சுமந்திரனதும், சிறீதரனதும் சாதி, மத அடையாளங்கள் குறித்து விலாவாரி யாக பேசுகிறார்கள். அப்படிப் பேசுவது குறித்து எந்தவித அவமானமும் அவர் களிடத்தில் இல்லை. அப்படி பேசுப வர்களில் அநேகர் தாங்கள் தலைவர் பிரபாகரனின் வழி நிற்பவர்கள் என்று அறிவிக்க வேறு செய்கிறார்கள். தலைவர் பிரபாகரனோ, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமோ சாதி, மத, பிரதேச வேறுபாடுகளை ஒரு போதும் அனுமதித்தது இல்லை. அனைவரும் சமமானவர்கள் என்ற எண்ணப்பாட்டை விதைத்தவர்கள். அவ்வாறான நிலையில், சாதி, மத, பிரதேசவாத அடையாளங்களின் வழியாக தமிழரசின் தலைவரைத் தேர்தெடுக்க முனைவோரும், அதனை வலியுறுத்து வோரும் புறந்தள்ளப்பட வேண்டியவர்கள். அவர்கள், குறுந் தேசிய வியாதிகள். அவர்களுக்கும் தமிழ்த் தேசியத்துக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இந்தக் குறுந்தேசிய வியாதிகள், அதிக தருணங்களில் மதவாத சக்திகளின் கைப்பாவைகள். தமிழ்த் தேசியம் தொடர்ந்தும் நிலை பெறுவதென்பது, தமிழ் மக்கள் மத்தி யில் மதவாதத்தை விதைப்பதற்கு தடை யாக இருக்கும். அதனை எப்படியாவது தகர்க்க வேண்டும் என்பதற்காக இந்தச் துர்சக்திகள் ஒவ்வொரு சந்தர்ப் பங்களையும் கையாள்கின்றன. கடந்த பொதுத் தேர்தல் நேரத்திலும் மதவாத – சாதியவாத பிரிவினை களை விதைக்க முற்பட்டார்கள். இப்போது, தமிழரசுக் கட்சியின் தலைமைத்துவத் தேர்தலின் போதும் அதனைத் தூக்கி சுமக்கிறார்கள். இவ்வாறான கசடுகளையெல்லாம் கடந்து நின்று பொதுக்குழு உறுப்பினர்கள், தமிழ் மக்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு வாக்களிக்க வேண்டும்.

ஒரு கட்சியின் தலைமைத்துவத் துக்கான தேர்தல் இவ்வளவு தாக்கங்களை சமூகத்துக்குள் ஏற் படுத்துகின்றது என்றால், அந்தக் கட்சியின் தேவை அதிகமானது என்று அர்த்தம். அதிருப்திகள் விமர்சனங்கள் இருந்தாலும் தமிழரசுக் கட்சி மீது மக்கள் இன்னமும் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள் என்பதை அது காட்டுகின்றது. இன்று தெரிவாகும் புதிய தலைவர், அதனை உள்வாங்கி கட்சியை ஒருங்கிணைத்து இளைஞர்களை அதிகமாக உள்வாங்கி செயற்பாட்டுத் திறனுள்ள கட்சியாக மாற்ற வேண்டும். ஓய்வூதியர்களின் கூடாரமே தமிழ்த் தேசிய அரசியல் என்ற நிலையை மாற்றி, விடுதலை நோக்கி வீறுநடைபோட வேண்டும். அதுதான், முதன்மைக் கட்சியான தமிழரசு மீது தமிழ் மக்கள் கொண்டி ருக்கும் எதிர்பார்ப்பு.

# விழா மண்டபங்களுக்கான கட்டணமும் கூட அதிகரிப்பு

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில், முற்பதிவுக ளுக்கான கட்டணங்களை அதிகரிப்ப தற்கு அகில இலங்கை விழா மண்டப மற்றும் உணவு விநியோகஸ்தர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைவாக, எதிர்வரும் நாள்களில் மேற்கொள்ளப்படும் முற்ப திவுகளுக்கான கட்டணத்தை 10 வீதத் தால் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள் ளதாக அகில இலங்கை விழா மண்டப மற்றும் உணவு விநியோகஸ்தர் சங்கத்தின் தலைவர் சாலிய ரவீந்திர தெரிவித்துள்ளார்.

தற்போது அனைத்து துறைகளின் பொருளாதார வளர்ச்சியும் 50 வீதத்தால் குறைவடைந்து செல்லும் நிலையே காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டி னார்.

மரக்கறிகள் மாத்திரமின்றி அனைத்து உணவுப்பொருள்களின் விலைகளும் சடுதியாக அதிகரித்துள்ள மையால், நட்டத்தை ஈடு செய்ய முடியாத நிலைமையே விழா மண்டப உரிமையா ளர்களுக்கு உள்ளதாக அவர் தெரிவித் துள்ளார்.

திருமண மண்டபங்கள், விழாக்களுக் கான மண்டபங்கள் என்பனவற்றுக்கான உணவு விநியோகம் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை வழங்கும் தமது தொழில் சார் உறுப்பினர்கள் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள மையை கருத்திற்கொண்டு முற்பதிவுக ளுக்கான கட்டணங்களை 10 வீதம் அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டதாக சாலிய ரவீந்திர தெரிவித்துள்ளார்.







# கல்முனை சந்தான ஈஸ்வரரின் மஹா கும்பாபிஷேகம் இன்று

(வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கல் முனை மாநகர் சந்தான ஈஸ்வரர் ஆலய மஹா கும்பாபிஷேகம் இன்று 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற வுள்ளது.கடந்த 17 ஆம் திகதி புதன் கிழமை கும்பாபிஷேகக் கிரியைகள் ஆரம்ப மாகின.

18 வியாழன், 19வெள்ளி, 20 சனி ஆகிய மூன்று தினங்கள் எண்ணெய்க் காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெற்றது. பெருந்திரளான பக்தர்கள் கொட்டும் மழைக்கு மத்தியில் எண்ணெய்க் காப்புச் சாத்தினர். இன்று 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை மஹா கும்பாபிஷேகம் இடம்பெறுமென ஆலய பரிபாலன சபை தலைவர் வே.செல்வேள் தெரிவித்தார்.







# எம்.ஜி.ஆரின் 107 ஆவது பிறந்ததினம் திருகோணமலையிலும் இடம் பெற்றது

(ஏ.எச்.ஹஸ்பர்)

முன்னாள் தமிழக முதலமைச்சர் மக்கள் திலகம், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரனின் 107ஆவது பிறந்த நாள் நினைவாக திருகோண மலை – பெரியகுளம் பாடசாலை மற்றும் ஆறாம் கட்டைப் பகுதியில் கற்கும் வறிய மாணவர்களுக்காக வில்வராசா என்னும் தனி நபரின் நிதி உதவியுடன் கற்றல் உபகரணங்கள் நேற்று முன் தினம் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வின் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான நிதியத்தின் ஸ்தாபக தலைவர் கனகசபை தேவ கடாட்சம் கலந்து கொண்டு புரட்சித் தலைவரின் சமூக மேம்பாட்டு நடவடிக் கைகள் பற்றி சிறப்புரையாற்றி னார்.

இந் நிகழ்வில் பாடசாலை மாண வர்கள் கலந்து கொண்டனர்.



# தொடர்கதையாகும் ஆக்கிரமிப்புக்கள் பல்கலை மாணவர்கள் அரங்கில் ஆய்வு

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பில் 'தொடர்கதையாகும் ஆக்கிரமிப்புக்கள்' எனும் தலைப்பில் புதன்கால மாணவர் அரங்கு கடந்த புதன்கிழமை கலைப்பீடப் பரீட்சை மண்டபத்தில் நடைபெற்றது.

கடந்த வார புதன்கால மாணவர் அரங்கில் 'திட்டமிட்ட சிங்கள -பௌத்தமயமாக்கமும் பண்பாட்டு அழிப்பும்' எனும் தலைப்பில் சமூகவியற்துறை மாணவன் நிதுர்சன் லம்பேட் (துணைத் தலைவர், கலைப்பீட மாணவர் ஒன்றியம்), 'நிலமிழந்தால் பலமிழப்போம்!'





எனும் தலைப்பில் சட்டத்துறை மாணவன் திரு.சிவகஜன் (துணைச் செயலாளர், கலைப்பீட மாணவர் ஒன்றியம்) ஆகியோர் கருத்துரையாற்றியிருந்தனர்.

ஒவ்வொரு வாரமும் புதன்கிழமைகளில் கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினால் முன்னெடுக்கப்படும் புதன்கால மாணவர் அரங்கு, மாணவர்களின் தனித்திறனை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்ட நிகழ்வுகள், சமூக அரசியல், பொருளாதார விடயப்பரப்புக்கள் தொடர்பான புலமையாளர்களின் கருத்துப்பகிர்வுகள் உள்ளிட்ட அம்சங்களை கொண்டவையாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




# பிரதேச சபை ஊழியர்கள் மூவர் முந்தல் விபத்தில் நேற்று காயம்

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் – கொழும்பு பிரதான வீதியின் முந்தல் 15 ஆம் மைல் கல் பிரதேசத்தில் நேற்றுக் காலை 10.30 மணியளவில் இடம்பெற்ற வாகன விபத்தில் பிரதேச சபை ஊழியர்கள் மூவர் காயமடைந்துள்ளனர்.

புத்தளம் பிரதேச சபைக்குச் சொந்தமான குப்பைகளை ஏற்றும் டிராக்டரில் கடமைபுரியும் ஊழியர்களே இவ்விபத்துக்கு முகம் கொடுத்துள்ளனர்.

புத்தளத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் சொகுசு பஸ், முந்தல் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த போது, முன்னால் சென்ற புத்தளம் பிரதேச சபைக்கு சொந்தமான இந்த டிராக்டரை முந்திச் செல்ல முற்பட்ட போது, எதிர்த்திசையில் இருந்து வந்த காருடன் மோதியதுடன் முன்னால் சென்ற டிராக்டரின் பின்பக்கமாகவும் மோதியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் புத்தளம் பிரதேச சபைக்குச் சொந்தமான டிராக்டரில் பயணித்த மூன்று ஊழியர்கள் காயமடைந்தனர். அவர்கள் முந்தல் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

மூன்று ஊழியர்களும் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக முந்தல் வைத்தியசாலையிலிருந்து சிலாபம் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முந்தல் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உத்தேச நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலத்தை மீளப்பெறுமாறு 58 அமைப்புகள் கோரிக்கை

உத்தேச நிகழ்நிலை காப்புச் சட்டமூலத்திற்கு 58 சர்வதேச சிவில் சமூக மற்றும் மனித உரிமை குழுக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. இச்சட்டமூலம் கருத்துச் சுதந்திரத்தை கடுமையாகக் கட்டுப்படுத்தக்கூடுமெனவும், ஜனநாயக விழுமியங்களுக்கு தீங்கு விளைவிக்கும் எனவும் அவை சுட்டிக்காட்டியுள்ளன.

ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு உள்ளிட்ட 58 அமைப்புகள், உத்தேச நிகழ்நிலை காப்பு சட்டமூலத்தை மீளப்பெறுமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

அத்துடன், சிவில் சமூகம் மற்றும் மனித உரிமை நிபுணர்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரினதும் ஆலோசனைக்கு அமைய, அதனைத் தயாரிக்க வேண்டுமென ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு கேட்டுக்கொண்டுள்ளது.

இந்த மாதம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள உத்தேச நிகழ்நிலைக் காப்புச் சட்டமூலம், குற்றங்கள் தொடர்பிலான எதனையும் விட விரிவான அர்த்தப்படுத்தல், சுயாதீன மேற்பார்வை இன்மை, நிறைவேற்றதிகாரத்தின் தேவைக்காக பயன்படுத்தப்படும் அபாயம் ஆகியவற்றைக் கொண்டுள்ளதாக அக்குழு தெரிவித்துள்ளது.

பொய்யான கருத்துகள் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் காணப்படும் தெளிவற்ற அர்த்தப்படுத்தலின் ஊடாக ஊடகத் தணிக்கை அமுல்படுத்தப்படும் சாத்தியம் காணப்படுவதாகவும் ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற் கான குழு குறிப்பிட்டுள்ளது.

# மின்சார சபையில் பணி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 66 ஆக உயர்வு

இலங்கை மின்சார சபையில் பணி நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 66 ஆக அதிகரித்துள்ளது.

சுகயீன விடுமுறையைப் பதிவு செய்து, அண்மையில் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கையில் பங்கு பற்றிய குற்றச்சாட்டில் அவர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டனர் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் இலங்கை மின்சார சபையின் 15 ஊழியர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

இலங்கை மின்சார சபையின் காசாளர்களே இவ்வாறு முதலில் பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தனர்.

நுகர்வோருக்கு இடையூறு ஏற்படும் வகையில் அவர்கள் செயற்பட்டுள்ளனர் என மின்சார சபை தெரிவித்துள்ளது.

# வாகன சோதனையில் ஈடுபட சிவில் உடையில் செல்லாதீர்!

## பொலிஸாருக்கு அறிவுறுத்தல்

இனிவரும் காலங்களில் சிவில் உடையில் வாகனங்களைச் சோதனைக்கு உட்படுத்த வேண்டாம் எனப் பதில் பொலிஸ்மா அதிபரினால் பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்த நபரின், அலவ்வ பகுதியில் அமைந்துள்ள வீட்டிற்கு நேற்று காலை சென்று இலங்கை பொலிஸ் சார்பில் ஒரு மில்லியன் ரூபா இழப்பீட்டுத் தொகையை வழங்கிய போது, பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.



3 பிள்ளைகளின் தந்தையான 41 வயதான ரொஷான் குமாரதிலக்க என்பவரே துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தார். அவரின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெறவுள்ளன.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சப் இன்ஸ்பெக்டரும் பொலிஸ் கான்ஸ்டபிளும் தற்காலிகமாகப் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டு சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட். சப் இன்ஸ்பெக்டர் நேற்று முன்தினம் மாலை குருநாகல் நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டமையையடுத்து, எதிர்வரும் 23 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

சிவில் உடையில் இருந்த பொலிஸ் அதிகாரிகள் இருவர் லொறியொன்றை நிறுத்துமாறு சமிக்ஞை செய்துள்ளனர்.

உத்தரவை மீறி பயணித்த அந்த லொறியை பின்தொடர்ந்த பொலிஸார் தம்பலஸ்ஸ பகுதியில் அதனை நிறுத்தியுள்ளனர்.

அத்துடன், லொறிச் சாரதியின் தலையில் கைத்துப்பாக்கியை வைத்தபோது அது இயங்கியதாக பொலிஸ் தரப்பில் கூறப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக விசேட பொலிஸ் குழு நியமிக்கப்பட்டுள்ளதாக பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

# இன்றைய ராசி பலன்கள் - 21.01.2024

## மேஷம்

இன்றைய நாள் சீரான முடிவுகளுக்கு சாதகமாக அமையாது. உங்கள் செயல்கள் சுமுகமாக நடப்பதற்கு அதிக அளவில் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். சில நேரங்களில் நம்பிக்கையின்றிக் காணப்படும். எனினும் நீங்கள் நம்பிக்கையை மீட்டமைக்க வேண்டும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் சகபணியாளர்களுடன் பழகும் போது கவனம் தேவை.

உங்கள் துணையுடன் அன்பான உறவைப் பகிர்ந்து கொள்வது கடினமாக இருக்கும். அதனால் அமைதியுடனும் பொறுமையுடனும் இருப்பது நல்லது.

இன்று பணத்தை பொறுத்தவரை மகிழ்ச்சிகரமான நாளாக இருக்காது. இன்று நிதிநிலைமையைச் சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

## ரிஷபம்

இன்றைய நாளை ஆன்மீகக் காரியங்களுக்குப் பயன்படுத்தலாம். அவை உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். பயணங்களுக்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன. உங்கள் செயல்களைக் கையாளும் பொழுது பொறுமையாக இருக்க வேண்டும்.

உங்கள் பணிகளைக் கையாளும் போது கவனம் தேவை. உங்கள் பணி எளிதாக சுமுகமாக நடக்க உங்கள் அறிவுத் திறனைப் பயன்படுத்தி புதிய யுக்திகளைக் கையாள வேண்டும். உங்கள் மூத்தவர்களின் ஆலோசனையைப்பெற வேண்டும்.

கருத்து வேறுபாட்டின் காரணமாக உங்கள மனதில் எதிர்மறையான எண்ணங்கள் காணப்படும். அதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள்.

## மிதுனம்

இன்று அசம்பாவிதங்களை தடுக்கும் வண்ணம் கவனமாக இருக்க வேண்டும். சூடான வார்த்தைகளை பேசுவதற்கான வாய்ப்பிருப்பதனால் முக்கியமாக அண்டை அயலாருடன் அல்லது மூன்றாவது நபருடன் பேசும் போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும்.

பணியிடச் சூழ்நிலை மகிழ்ச்சி அளிக்கும் வகையில் இருக்காது. வேலையைப் பொறுத்தவரை பட்டியலிட்டு பணியைச் செய்வது சிறந்தது.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு ஏற்படும். அதனால் மகிழ்ச்சியுடன் இருக்க முடியாது.

தேவையற்ற செலவினங்கள் மேற்செலவினங்களாக ஏற்படும். அத்தகைய செலவுகளைத் தவிர்ப்பதற்குக் குறைந்த அளவு சாத்தியமே உள்ளது.

## கடகம்

இன்றைய நாள் நம்பிக்கைக்கு உரிய நாளாக இருக்கும். உங்களுக்கு விருப்பமான உயர்ந்த லட்சியங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியும். புதிய தொடர்புகளுக்கும் புதிய நட்புக்கும் இன்று வாய்ப்புள்ளது.

பணியில் சிறந்த வளர்ச்சி காணப்படும். சகபணியாளர்கள் உங்கள் செயல்திறனைக் கண்டு பொறாமைப்படுவார்கள். உங்கள் பணியைப் பொறுத்தவரை பல்வேறு புதிய வாய்ப்புகளை ஆராயும் நிலையில் இருப்பீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

உங்கள் துணையுடனான உறவில் சமநிலை காணப்படும். அவரும் உங்களுக்கு ஒத்துப் போவார்.

பணப்புழக்கம் அதிகமாகக் காணப்படும். உங்கள் சேமிப்பை அதிகரிக்கக் கூடிய வாய்ப்புகள் அதிக அளவில் காணப்படுகின்றன.

## சிம்மம்

இன்று உங்கள் விருப்பங்கள் நிறைவேறும் நாள். சிறிய முயற்சிகள் கூட இன்று உங்களுக்கு சாதகமாக அமையும். உங்களுடைய நண்பர்களின் மற்றும் கூட்டாளிகளின் ஆதரவு கிடைக்கும்.

புதிய வேலை பெறுவதற்கான வாய்ப்புகள் உங்களுக்கு உள்ளன. இன்று கிடைக்கும் இந்த நல்ல வாய்ப்புகளை நீங்கள் பயன்படுத்திக் கொள்ள முடியும்.

உங்கள் துணையுடன் நேர்மறை எண்ணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

நிதியைப் பொறுத்தவரை இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

இன்று நீங்கள் ஆரோக்கியமாக காணப்படுவீர்கள். உங்களிடம் ஆற்றலும் நம்பிக்கையும் காணப்படும்.

## கன்னி

இன்று அசௌகரியங்கள் காணப்படும். முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு உங்கள் மனதை தெளிவாக வைத்திருக்க வேண்டும். உங்கள் அருகில் உள்ளவர்கள் மற்றும் அன்பானவர்களிடம் பேசுவதில் தயக்கம் காணப்படலாம்.

பணியிடச் சூழ்நிலை இன்று உங்களுக்கு சவாலாக அமையும். உங்கள் செயல்பாட்டிற்கான அங்கீகாரமும் உங்களுக்கு கிடைக்காது. இது உங்களுக்கு வருத்தத்தை அளிக்கும்.உங்கள் துணையுடன் நீங்கள் சண்டையிடுவீர்கள். கருத்து வேறுபாட்டின் காரணமாக உங்கள் துணையுடன் வாக்குவாதம் ஏற்பட வாய்ப்புள்ளது.

இன்று அதிக செலவினங்கள் காணப்படும். வீட்டு மறுசீரமைப்பிற்கும் வீட்டை செப்பனிடுவதற்கும் பணத்தை செலவு செய்வீர்கள்.

## துலாம்

உங்கள் உணர்ச்சிகளை நீங்கள் கட்டுப்படுத்த வேண்டும். பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் இருக்க வேண்டும். வெற்றியில் கவனத்தை செலுத்த நம்பிக்கை ஒன்றே அவசியம்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளை எளிதாக முடிப்பதற்கு நீங்கள் சில சௌகரியங்களை இழக்க வேண்டியிருக்கும். பணியில் தாமதங்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

இன்று உங்களிடம் காணப்படும் அகந்தை உணர்வு காரணமாக உங்கள் துணையுடனான உறவு பாதிக்கப்படும். மகிழ்ச்சி குறைந்து காணப்படும்.

உங்களுடைய குடும்ப வளர்ச்சிக்காக இன்று பணத்தை செலவு செய்வீர்கள். அதன் காரணமாகப் பணப் பற்றாக்குறை காணப்படும்.

## விருச்சிகம்

இன்று அதிக அளவில் பலன்கள் கிடைக்கக் கூடிய சூழ்நிலைகள் காணப்படும். ஆன்மிக செயல்களில் ஈடுபடுவது ஆறுதலை அளிக்கும். மேலும் சவால்களை எதிர்கொண்டு வெல்வதற்கு உதவும். பணியில் இன்று வெற்றிகரமான பலன்கள்கிடைக்கும். உங்கள் அணுகுமுறையில் யதார்த்தமும் கவனமும் காணப்படும். பணிச் சூழல் உங்களுக்கு மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் அன்பான உணர்வுகளை மகிழ்ச்சியான வார்த்தைகளில் பகிர்ந்து கொள்வீர்கள். உங்கள் உணர்வுகளை வெளிப்படையாக பகிர்வதால் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்துவீர்கள்.

இன்று சேமிப்பது எளிதாக இருக்கும். எதிர்பாராத வகையிலும் பணம் கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

# இன்றைய ராசி பலன்கள் - 21.01.2024




உங்கள் முயற்சிகளின் வளர்ச்சி சாதகமாக இருக்கும். உங்கள் சாதனைகள் மூலம் உங்கள் திறனை உணர முடியும். உங்கள் தொடர்பாடல் திறமை நன்கு வெளிப்படும்.

உங்கள் திறமை மற்றும் உறுதி காரணமாக உங்கள் பணிகளில் நீங்கள் வெற்றி பெறுவீர்கள். நீங்கள் உங்கள் பணிகளை நேர்மையாகச் செய்வீர்கள். உங்கள் துணையுடனான உங்கள் அணுகுமுறையில் நேர்மை காணப்படும். இந்த நேர்மை திருப்திக்கும் நல்ல புரிந்துணர்வுக்கும் வழிவகுக்கும்.

எதிர்பாராத வகையில் பணம் கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் உள்ளன. உங்கள் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான சிறுவகை கடனாகக் கூட அது இருக்கலாம்.




இன்றைய தினம் உங்கள் வளர்ச்சியில் தடைகள் காணப்படும். அறிவு பூர்வமாகச் சிந்தித்துச் செயல்படுவது நல்லது. பயத்தின் காரணமாகச் சோர்ந்து காணப்படுவீர்கள். மகிழ்ச்சி குறைந்து காணப்படும்.

இன்று பணிகளில் தவறுகள் நேர வாய்ப்பிருப்பதால் கவனமாக பணியாற்ற வேண்டும். உங்கள் தவறுகள் உங்கள் மேலதிகாரிகளின் கவனத்துக்கும் கூடச் செல்லலாம். இன்று மந்தமாக உணர்வீர்கள். உங்கள் கருத்துகளை வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்ள மாட்டீர்கள். சங்கடமான நிலையை உணர்வீர்கள்.

இன்று பணவரவு மகிழ்ச்சியை அளிக்கும். எதிர்பாராத வகையில் சம்பாதிப்பீர்கள். எனினும் அதில் திருப்தி அடையமாட்டீர்கள். நாளின் இறுதியில் தேவையற்ற செலவுகளை சந்திப்பீர்கள்.




இன்றைய நாள் சாதகமான நாளாக அமையாது. நீங்கள் சாந்தமாகவும் மகிழ்ச்சியுடனும் இருப்பது நல்லது. இன்றைய செயல்களை சிறந்த முறையில் நிர்வகிக்க நீங்கள் வளைந்து கொடுத்து போக வேண்டியது அவசியம்.

பணிகளை ஆற்றும் பொழுது நீங்கள் தவறுகள் செய்ய நேரலாம். இன்று பணியில் கவனம் செலுத்துவது மிகவும் அவசியம். உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்துகொள்வீர்கள். திருப்தியும் புரிந்துணர்வும் உறவில் வளர நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும்.

பணப்புழக்கம் திருப்தி அளிக்காது. கூடுதல் செலவினங்கள் ஏற்படலாம். அது உங்களுக்கு அதிருப்தியை அளிக்கும். பாதுகாப்பற்ற உணர்வின் காரணமாக பதட்டம் காணப்படும்.




இன்றைய நாள் பொதுவாகச் சிறப்பாக உள்ளது. நீங்கள் உயர்ந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள். நடக்கும் நிகழ்வுகள் மகிழ்ச்சியை அளிக்கும்.

நீங்கள் உங்கள் ஆக்கத் திறனை மேம்படுத்தி மிகவும் சிறந்த முறையில் பணியாற்ற முடியும். கடினமான பணிகளைக் கூட எளிதாக முடிக்கும் திறன் உங்களிடம் காணப்படும்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையே இருக்கும் பரஸ்பர அன்பு மற்றும் ஆழ்ந்த புரிந்துணர்வு காரணமாக உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கத்தைப் பராமரிப்பீர்கள்.

கணிசமான பண வளர்ச்சியைக் காண்பீர்கள். அதிர்ஷ்டகரமான நாளாக இருப்பதால் பணவரவு அதிகமாக இருக்கும்.

மகிழ்ச்சியுடனும் திருப்தியுடனும் காணப்படுவீர்கள்.







# ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலில் பிரதமர் மோடி சாமி தரிசனம்!






பிரசித்தி பெற்றதும், 108 வைணவத் தலங்களுள் முதன்மையானதுமான திருச்சி ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலில் பிரதமர் நரேந்திர மோடி நேற்று சுவாமி தரிசனம் செய்தார்.

ஸ்ரீரங்கம் கோயிலில் சுவாமி தரிசனம் செய்த முதல் பிரதமர் நரேந்திர மோடி என்பது குறிப்பிடத்தக்கது.

பிரதமர் நரேந்திர மோடி 3 நாள் பயணமாக தமிழகத்திற்கு விஜயம் செய்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை தமிழகம் சென்ற பிரதமர், சென்னையில் 2023 ஆம் ஆண்டுக்கான கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டுப் போட்டிகளின் ஆரம்ப விழாவில் கலந்து கொண்டு போட்டியை தொடங்கி வைத்தார்.

தமிழக பயணத்தின் இரண்டாம் நாளான நேற்று காலை சென்னையில் இருந்து விமானம் மூலமாக திருச்சி சென்ற பிரதமர், அங்கிருந்து உலங்கு வானூர்தி மூலமாக பஞ்சகரை சாலைக்கு சென்று அங்கிருந்து வீதிவழியாக ஸ்ரீரங்கம் கோயிலை அடைந்தார். அங்கு அவர் முற்பகல் 11 மணி முதல் 12.30 மணி வரை சுவாமி தரிசனம் செய்தார். தெற்கு கோபுர வாசல் வழியாக கோயிலுக்குள் நுழைந்த பிரதமருக்கு பூரண கும்பமரியாதை அளிக்கப்பட்டது. தொடர்ந்து கருடாழ்வார் மூலவர் தாயார் உள்ளிட்ட முக்கிய சன்னதிகளிலும், சக்க ரத்தாழ்வார், பட்டாபிராமர், கோதண்ட ராமர், ராமானுஜர் சன்னதிகளிலும் சாமி தரிசனம் செய்தார். தொடர்ந்து கோயில் யானை ஆண்டாளிடம் ஆசி பெற்றார்.

பிரதமரின் வருகையை ஒட்டி ஸ்ரீரங்கத்தில் 5 அடுக்கு பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. பிரதமரின் சாமி தரிசனத்தை முன்னிட்டு பகல் 2.30 மணி வரை பொது மக்கள் தரிசனத்துக்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. சாமி தரிசனத் துக்காக வீதி வழியாக பிரதமர் வந்தபோது வீதிகளின் இரு புறங்களிலும் மக்கள் கூடி நின்று பிரதமருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். திருச்சியில் சாமி தரிசனத்தை முடித்துக்கொண்ட பிரதமர் மோடி, திருச்சியில் இருந்து விமானம் மூலமாக மதுரைக்குச் சென்று அங்கிருந்து இராமமேஸ்வரம் கோயிலுக்கு சாமி தரிசனத்துக்கு சென்றார்.

அயோத்தியில் கட்டப்பட்டுள்ள ராமர் கோயில் கும்பாபிஷேகம் நாளை நடைபெற உள்ளது. இதற்கான நிகழ்ச்சியை முக்கிய நபராக இருந்து பிரதமர் நரேந்திர மோடி நடத்த உள்ளார். இதை முன்னிட்டு 11 நாள் விரதம் இருந்து வரும் பிரதமர் நரேந்திர மோடி, ராமாயணத்துடன் தொடர்புடைய ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டு வருகிறார்.

அந்த வகையில், நேற்று ராமரும் சீதையும் வழிபட்ட கோயிலாகக் கருதப்படும் ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோயிலுக்குச் சென்று பிரதமர் மோடி வழிபட்டார். இதனையடுத்து, பிரதமர் மோடி இராமேஸ்வரம் சென்றார். அங்கு அவர் ராமநாத சுவாமியை வழிபட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பயங்கரவாதத்தை ஏற்றுக்கொள்ளவே முடியாது: காசா போர் குறித்து எஸ்.ஜெய்சங்கர் கருத்து

"காசா போரால் மிகவும் பாதிக்கப் பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கும் வகையில், நிலையான தீர்வு தேவைப்படுகிறது. பயங்கரவாதத்தையும், பணயக்கைதிகளை பிடித்து வைத்திருப் பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது."

– இவ்வாறு இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் தெரிவித்துள் ளார்.

ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடங்கிய காசா – இஸ்ரேல் மோதல், தற்போது வரை தொடர்ந்து வருகிறது. "காசா தாக்குதல் வெறும் ஆரம்பம்தான் இனி நடப்பதை என்னால் கூட கணித்துச் சொல்ல முடியாது" என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு ஆரம் பத்திலேயே எச்சரித்தார். இன்னும் இந்த போருக்கு சுமூக முடிவு காணப்படவில்லை.

இந்த நிலையில், இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் உகாண்டா தலைநகர் கம்பாலாவில் நடைபெற்ற 19 ஆவது அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டில் கலந்துகொண்டார்.

இதன்போது அவர் உரையாற்று



கையில்,

"காசாவில் தற்போது நிலவிவரும், மோதல்களைப் பற்றி எம்மால் புரிந்து கொள்ள முடிகிறது. இந்த போரால் மிகவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கும் வகையில், நிலையான தீர்வு தேவைப்படுகிறது. பயங்கரவாதத்தையும், பணயக்கைதி களை பிடித்து வைத்திருப்பதையும் ஏற்றுக்கொள்ள முடியாது.

அதே நேரத்தில், அனைத்து நாடு களும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மதிக்க வேண்டும். இந்த மோதல் பிராந்தி யத்திற்குள் அல்லது அதற்கு வெளியே பரவாமல் இருப்பது அவசியம். பாலஸ்தீன மக்கள் பாதுகாப்பான எல்லைக்குள் வாழவேண்டும்.

அதே வேளையில், இரு நாடுகளிலும் அமைதி நிலவுவதற்கான தீர்வை நாம் தேட வேண்டும். நமது கூட்டு முயற்சிகளின் மூலம், இதை நனவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டும்" – என்றார்.

# சிரியா மீது இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் ஈரானிய இராணுவ ஆலோசகர்கள் நால்வர் உயிரிழப்பு



சிரியா தலைநகர் டமாஸ்கஸ் மீது இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் ஈரானிய இராணுவ ஆலோசகர்கள் நால்வர் உயிரிழந்துள்ளனர்.

சிரிய இராணுவத்தை சேர்ந்த பலர் உயிரிழந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பாதுகாப்புப் படைப்பிரிவின் உறுப்பினர்கள் தங்கியிருந்த நான்கு மாடி கட்டடத்தை இலக்கு வைத்து இந்த தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

2011 இல் உள்நாட்டுப் போர் ஆரம்பமாகியதிலிலிருந்து ஈரானின் புரட்சிகர பாதுகாவலர்களின் சிரேஷ்ட உறுப்பினர்கள் குழு சிரியாவில் உள்ளது.

சிரிய ஜனாதிபதி பஷர் அல் அசாத்தின் ஆட்சியை ஆதரிப்பதற்காக இந்த குழு உள்ளது.

எனினும், தலைநகர் டமாஸ்கஸில் தாக்குதல் நடத்தப்பட்ட கட்டடத்திற்கு அருகிலேயே ஐ.நா.வின் தலைமையகம், தூதரகங்கள் மற்றும் இராணுவ விமான நிலையம் என்பன அமைந்துள்ளன.

இந்த தாக்குதலையடுத்து, தலைநகர் டமாஸ்கஸின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து இஸ்ரேல் இதுவரை எந்தவொரு உத்தியோகப்பூர்வ அறிவிப்பையும் வெளியிடவில்லை.

# ட்ரம்புக்கு ஆதரவாக பிரசாரம் செய்வேன்!

## – விவேக் ராமசாமி அறிவிப்பு



ஜனாதிபதி தேர்தலில் டொனால்ட் ட்ரம்புக்கு ஆதரவாக பிரசாரம் செய்ய உள்ளேன் என விவேக் ராமசாமி தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில், எதிர்வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதி தேர்தல் நடைபெற உள்ளது. தற்போதைய ஜனாதிபதியான ஜோ பைடன், ஜனநாயக கட்சி சார்பில் மீண்டும் போட்டியிட உள்ளார்.

அவரை எதிர்த்து குடியரசு கட்சியை சேர்ந்த முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தீவிரமாக களம் இறங்கி உள்ளார்.

இதற்கிடையில், இந்திய வம்சாவளியை சேர்ந்த விவேக் ராமசாமி, அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட உள்ளேன் என அறிவித்தார்.

அத்துடன், தான் ஜனாதிபதியாக வந்தால் பல மாற்றங்களை கொண்டுவருவேன் என்றும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடப்போவதில்லை என்று விவேக் ராமசாமி அறிவித்து உள்ளார்.

டொனால்ட் ட்ரம்ப் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட உள்ளதால், நான் விலகுகிறேன். அவருக்கு ஆதரவாக பிரசாரம் செய்ய உள்ளேன் என விவேக் ராமசாமி தெரிவித்துள்ளார். மேலும், டொனால்ட் ட்ரம்ப் வெற்றி பெற வாழ்த்துகளையும் தெரிவித் துள்ளார்.

# சீனாவில் பாடசாலை விடுதியில் தீ விபத்து: 13 பேர் பலி



மத்திய சீனாவில் யாங்ஷாங்புவில் உள்ள பாடசாலை விடுதியில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி 13 பேர் உயிரிழந்தனர்.

தங்கும் விடுதி கட்டம் ஒன்றில் நேற்று முன்தினம் இரவு தீ பரவியுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை. தனியார் பாடசாலையின் மேலாளரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.